2019 ஜூலை 5] [திரு. பி. தங்கமணி]

அம்மாவிற்குமேல் அண்ணன் வந்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமாதிரி திட்டங்களைக் கொண்டு வர அம்மா அவர்கள் என்னென்ன செய்தார்களோ—நான் நேற்றையதினமே தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். ஏதோ, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அமைதியாக உட்கார்ந்திருந்தார் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தீர்கள். அவருடைய உண்மையான செயல்திறனை (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் ஏற்கெனவே நேற்றையதினம் என்னுடைய பதிலுரையில் சொல்லியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, நீங்கள் எல்லோரும் நினைப்பது மக்களைப் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதுதான். (குறுக்கீடு) மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திட்டங்களைக் கொண்டு வருகின்றோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நஷ்டஈட்டைப் பற்றிச் சொன்னார்கள். நஷ்டஈட்டை அந்த PGC–யில்தான் கொடுக்கின்றார்கள். ஆனால், நிர்ணயிப்பது நமது மாவட்ட ஆட்சியர்கள். அப்படி நிர்ணயிப்பதை யார் ஒத்துக்கொள்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுத்திருக்கின்றார்கள். நீங்கள் ஒத்துக்கொண்டிருப்பீர்கள். உங்களுடைய சம்பந்தி ஒத்துக்கொண்டிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். அதனால் கொடுக்கவில்லை. அதனால், உங்கள் சம்பந்தியை ஒத்துக்கொள்ளச் சொல்லுங்கள். நாளைக்குக் காலையிலே நான் வங்கியில் பணத்தைக் கட்டச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

(ஊ) மூங்கில்துறைப்பட்டு, செய்யாறு, கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுத்தல் அல்லது கரும்பை வெல்லமாக காய்ச்ச நடவடிக்கை எடுத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

***திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூங்கில்துறைப்பட்டு, செய்யாறு, கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் எல்லாம் இப்போது இயங்காமல் இருக்கின்றன. கிராமத்திலே குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் வறட்சியாக உள்ளது. வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, ஒரு துண்டுக்குக்கூட தண்ணீர் பாய்ச்ச முடியாமல் கரும்புகள்*

காய்வதைப் பார்த்து, விவசாயிகள் கண்ணீர் விடக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு தனியார் ஆலைகள் 7 மாத, 8 மாத கரும்புகளையெல்லாம் வெட்டி எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால், அரசாங்க கூட்டுறவு ஆலைகள் ஒன்றுகூட இயங்காத காரணத்தால், அந்தக் கரும்பை வெட்டி, வெல்லமாகக் காய்ச்சி, குறைந்த அளவாவது வருமானம் பெறலாம் என்ற அந்த விவசாயிகளுடைய கோரிக்கையை இன்றைக்கு நிறைவேற்ற முடியவில்லை. கரும்பு வெட்டுகின்ற கூலித் தொழிலாளர்கள் தனியாருக்கு கரும்பை வெட்டினால் அவர்களுக்கு உத்தரவு இரத்தாகும் என்று மிரட்டுகிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றுகூட தமிழகத்திலே இயங்காமல் இருக்கிறது. தனியார் ஆலைகள், காய்ந்துபோன அந்தக் கரும்புகளையெல்லாம் வெட்டி தங்கள் ஆலைக்கு அனுப்புகின்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12—20

கரும்பு விவசாயம் என்பது இன்றைக்கு கண்ணீர் விவசாயம் என்று சொல்லும் அளவிற்கு காய்ந்திருக்கின்ற கரும்புகளைப் பார்த்து கண்ணீர் விடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தக் கரும்புகளை வெட்டியெடுக்க வழிவகை செய்ய வேண்டும் அல்லது வெல்லமாகக் காய்ச்சி விவசாயிகள் ஓரளவு வருமானம் பெறும் நிலையை உருவாக்க வேண்டும். கூட்டுறவு ஆலை ஒன்றையாவது இயக்கி இந்தக் கரும்புகளையெல்லாம் அந்த ஆலைக்கு அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும், வறட்சி மாநிலமாக இன்றைக்கு இருக்கின்ற காரணத்தினால், கரும்பு விவசாயிகளுடைய கோரிக்கைகளை அரசு நிறைவேற்றுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலைக்குட்பட்ட பகுதியில் 10,971 ஏக்கர் கரும்பு சாகுபடி நடவு செய்யப்பட்டுள்ளது. வறட்சியினால் கரும்பு காய்கின்ற நிலையை விவசாயப் பெருங்குடி மக்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, Sugar Commissioner அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அங்கு ஆய்வு செய்து

2019 ஜூலை 5] [திரு. எம். சி. சம்பத்]

கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக ஆய்வு செய்து, எத்தனை ஏக்கர் கரும்பு பாதிக்கப்பட்டுள்ளது, என்ன நிலைப்பாடு என்று மூங்கில்துறைப்பட்டு, கள்ளக்குறிச்சி 1, கள்ளக்குறிச்சி 2 பகுதிகளில் இருக்கின்ற ஒட்டுமொத்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய கரும்பு காய்கின்ற நிலையை ஆய்வு செய்வதற்கு ஆய்வு committee *அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆய்வு* committee *தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. எந்த விவசாயிக்கு எத்தனை ஏக்கர் கரும்பு பாதிக்கப்பட்டுள்ளது, கரும்பு காய்ந்திருக்கின்றது என்று ஆய்வு* committee *ஒரு வார காலத்திற்குள்ளாக அந்த நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கின்றோம். அந்த உத்தரவின் அடிப்படையில், உடனடியாக மூங்கில்துறைப்பட்டு, கள்ளக்குறிச்சி 1, கள்ளக்குறிச்சி 2, கள்ளக்குறிச்சி 3 பகுதிகளில் இருக்கின்ற 3 ஆலைகளில் ஓர் ஆலையை இயக்கி, நிச்சயமாக அந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய நலனைக் காப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அரசு மிக கவனத்தில் எடுத்துக் கொண்டு, உடனடியாக அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்புகளையெல்லாம் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி,* insurance *செய்திருக்கிறார்கள். ஆனால்,* insurance *செய்தவர்களின் நிலங்களை அதிகாரிகள் வந்து பார்க்காமல், கரும்புக்கு* insurance *தொகை கிடைக்காமல், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயத் துறையின் சார்பாக அந்தக் காய்ந்த கரும்புகளைக் கணக்கெடுத்து* insurance *பணம் விவசாயிகளுக்கு விரைந்து கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)*

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நீங்கள் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் ஒன்றும் (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். என்னைப் பேச விடமாட்டேன் என்கிறீர்களே! அது*